# தமிழ் நாவலில் இனக்குழு சமுதாய பண்பாட்டு மரபுகள்

**முனைவர் சு. பேச்சியம்மாள்,**

**தமிழியல் துறை, உதவிப் பேராசிரியர்**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,**

Email ID: spetchi29@gmail.com.

1

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் சமூக நடத்தை முறைகளையும் சமூக பண்பாட்டு நிறுவனங்களையும் நுட்பமாகப் பகுப்பாய்வுக்குட்படுத்தும் புலங்களுள் மானிடவியல் குறிப்பிடத்தக்கது. இலக்கியங்கள் மனித சமூகத்தைப் பற்றியே பேசுகின்றன என்பதால் இலக்கிய வாசிப்புக்கு மானிடவியலைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன என்பதனை ஆய்வாளர்கள் உணர்ந்துள்ளனர். மானிடவியல் அறிவைக் கொண்டு இலக்கியத்தை ஆய்வு செய்யும் போக்கு அண்மைக் காலத்தில் ஆய்வாளர்களின் கவன ஈர்ப்புக்குள்ளாகி உள்ளது. மானிடவியலுக்கு அடிப்படையான சில கொள்கைகள் உள்ளன. அண்டம், உலகம், உயிரினங்கள், மனிதன் ஆகிய அனைத்தும் படிநிலை வளர்ச்சியின் விளைவுகளே அன்றிப் படைக்கப்பட்டவை அல்ல. மனிதச் சமூகம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இன்றைய நிலையை எட்டியுள்ளதோடு பண்பாட்டிலுள்ள அனைத்துக் கூறுகளும் ஏதேனும் ஒரு செயற்பாட்டை கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பு என்பது அதன் முதன்மையான உற்பத்தி முறையைத் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் இச்சமூக அமைப்பின் எச்சங்கள் பல நாவல்களில் பதிவாகியுள்ளவற்றை இனம் காணுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்

**முன்னுரை**

மானிடவியல் அறிவைக் கொண்டு இலக்கியத்தை ஆய்வு செய்யும் போக்கு அண்மைக் காலத்தில் ஆய்வாளர்களின் கவன ஈர்ப்புக்குள்ளாகி உள்ளது. மனிதச் சமூகம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து இன்றைய நிலையை எட்டியுள்ளதோடு பண்பாட்டிலுள்ள அனைத்துக் கூறுகளும் ஏதேனும் ஒரு செயற்பாட்டை கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பு என்பது அதன் முதன்மையான உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றத்தால் சமூதாய முறையும் மாற்றமடைவது என்பது இயல்பு. சங்க கால இனக்குழு எச்சங்கள் இன்றும் தமிழ் நாவல் இலக்கியங்களில் பதிவாகியுள்ளதையும் தொல்லியல் மானிடவியலுக்கு கடந்த கால மனிதனைப் பற்றியும், படிமலர்ச்சி ஆய்வுகளுக்கு கடந்த கால சான்றுகள் முதல் தற்காலச் சான்றுகள் வரையும் தேவைப்படுவது போல் நாவல் இலக்கியங்களில் காணலாகும் பதிவுகளில் கடந்த கால தொல் சமூக எச்சங்கள் படிமலர்ச்சியாக தொடர்ந்து வருவதையும் பார்க்க முடிகிறது. இலக்கியம் என்பது பண்பாட்டின் உற்பத்திப் பொருள். சமூகம் அல்லது பண்பாடு உற்பத்தி செய்யும் எந்த ஒரு கூறு தன்னுடைய தேவையின் அடிப்படையிலானது என்பது மானிடவியல் கண்டறிந்த உண்மையாகும். படைப்பாளி என்பவன் சமூகத்தின் ஓர் உறுப்பினன் அவன் வாழும் சமூகத்தின் அசைவியக்கங்கள் அவனுக்குள் ஏற்படுத்தும் கிளர்ச்சியால்

உந்தப்பட்டு பல வகையான பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் புனைந்து காட்டினாலும் அப்பண்பாட்டின் முழுமையாக எழுத முடியாவிட்டாலும் அப்பண்பாட்டை பற்றி கூறும்போது அப்பண்பாட்டில் மக்கள் பேசக்கூடிய மொழி, புழங்குப் பொருட்கள் உணவுமுறைகள், நிலவியல்,அசையும் பொட்கள்,அசையா பொருட்கள், தொழில் என எழுதுவதற்கு பயன்படுத்தும் போது அப்பண்பாட்டின் கூறுகள் பின்னி பிணைந்து இருப்பது உண்மை. அப்பண்பாட்டின் கூறுகளில் கடந்த கால பதிவுகளும் சிறு சிறு கூறுகளாக தொடர்ந்து படைப்பாளர்கள் பதிவு செய்வதை காண முடிகிறது. படைப்பாளி படைக்கும் படைப்பில் கடந்த கால தொல் சமூக இனக்குழு எச்சங்கள் எவ்வாறு பதிவு செய்யப் பெற்றுள்ளன என்பதை கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இனவரைவியல்**

இலக்கியத்திற்கும் இனவரைவியலுக்கும் இடையில் உறவு நிலை இருப்பதால் இலக்கியத்தின் வழியாக இனக்குழு சமூக பண்பாட்டை அணுக இயலும் என்ற கருத்து நிலவியதன காரணமாக, இனவரைவியல் என்பது மானிடவியலின் ஒரு பிரிவாகும். ஒரு பண்பாடு வரிவடிவத்தில் விளக்கப்படுவதே இனவரைவியல் என்று அழைக்கப்படுகின்றது. இது பண்பாட்டை எழுதுதல் என்றும் குறிக்கப்படுகின்றது. அது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்கள் குழுவின் பண்பாட்டை முழுமையாக எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு குறிப்பிட்ட இனக்குழு அல்லது பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியலாகும். (Fetterman **1989:11)** பண்பாட்டை எழுத்து வடிவில் தொகுத்து அளிப்பதே இனவரைவியலின் நோக்கமாகும். “இனவரைவியலில் பங்கேற்று உற்று நோக்குதல் அடிப்படையாகும். மக்களிடம் சென்று அவர்களுடன் நெருக்கமாகக் கலந்து பழகி நீண்ட காலம் வாழ்ந்து பங்கேற்று உற்று நோக்குவதன் மூலம் எழுதப்படுவதே இனவரைவியல்” (ஜான் மோனகன், 2005:27).

இனவரைவியலை எவ்வாறு சேகரிக்க வேண்டும் என்று பக்தவச்லபாரதி பின்வருமாறு கூறுகிறார். புவிச்சூழலியல் (Topography), சுற்றுச்சூழல் (Envirnment), காலநிலை (Climate), குடியிருப்பு முறை (Settlement Pattern), பொருள்சார் பண்பாடு (Material Culture), குடும்ப அமைப்பு, திருமணமுறை, உறைவிட முறை (Sesidence Pattern), வாழ்வியல் முறை, சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்க முறை (Enculturation) மக்களின் உளவியல் பாங்குகள, மணக்கொடை, (வரதட்சணை), மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம் (Subsistence Economy) தொழிற்பகுப்பு முறை (division of Labour), உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்றமுறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறைகள், அதிகார வரவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள் (Customary Laws) சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறை, மந்திரம் சூனியம், விழாக்கள், இசை விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், நாட்டார் வழக்காறுகள் ஆகிய கூறுகளை இனவரைவியலாளன் முதன்மைப்படுத்துகிறான்” (பக்தவத்சலாரதி,1999:118,119) இவற்றைச் சேகரித்து ஒழுங்குப்படுத்தித் தந்தால் ஓரளவிற்கு முழுமையான பண்பாட்டை வெளிப்படுத்த இயலும்.

“இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு நின்று விடுவதில்லை. எவ்வாறு மொழி, பண்பாடு, சமுதாய நிறுவனங்கள், மரபுகள், திணைசார் அறிவு போன்றவை கால அடுக்குகளைக் கடந்து படிமலர்ச்சியடைந்து சமகாலத்தளத்தில் நிற்கின்றனவோ அதனைப் போன்றே இலக்கிய மரபும் தொடர்ந்து வந்திருக்கின்றது” (ஞா.ஸ்டீபன்). தமது முன்னோர்கள் ஆந்திராவிலிருந்து குடியெர்ந்தது முதல் தமிழகத்தில் குடிபுகுந்து நிலைகொண்டது கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் பிரிட்டீஷ் அரசின் காலனியாக இந்தியா மாறிய நிலையில் அது பற்றி நாயக்கர்கள் முன்வைக்கும் கண்ணோட்டங்கள் வரையில் மக்களுடைய வழக்கில் உலவிய வாய்மொழி மரபுகளை அம்மக்களில் ஒருவராக இருந்து உற்றுநோக்கியும் கேட்டும் திரட்டிய கி.ரா. அவற்றைக் கொண்டு ஒரு வாய்மொழி வரலாற்று நாவலையே படைத்துள்ளார். இத்தன்மையின் காரணமாகத் தான் இந்நாவலை ‘நாட்டார் நாவல்’ என்று சிறப்பித்துக் கூறுகிறார் நா.வானமாமலை (ப.9).

ஆந்திராவில் இருந்து தென் தமிழகத்திற்கு இடப்பெயர்வு செய்து, கரிசல் மண்ணான கோவில்பட்டி வட்டாரத்தில் காடழித்து வேளாண்மை நிலமாகச் சீத்திருத்திக் குடியமர்ந்த கம்மவார் பிரிவைச் சேர்ந்த நாயக்கர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி இந்நாவல் பேசுகிறது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஆந்திராவிலிருந்து இரண்டு வகையான மக்கள் கூட்டங்கள் இடம்பெயர்ந்து தமிழகத்திற்கு வரும் வரையில் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்து, நிலைத்த குடிகளாக வேர்கொண்டிருக்கும் வேளாண்மைக் குடிகளும் ஆகும். வேளாண் குடிகளுள் ஒன்றான நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் இடப்பெயர்வை மையப்படுத்திப் படைக்கப்பட்ட இலக்கியப் படைப்பு என்னும் வகையில் ‘கோபல்ல கிராமம்’ நாவல் முதல் முயற்சியாகும்.

கரிசல் நிலப்பின்னணியில் கூட்டு வாழ்க்கை வாழும் நாயக்கர்களின் குடியிருப்புமுறை (பக்.18-19), கோட்டையார் வீடு உள்ளிட்ட ஏனைய அனைத்து வீடுகளின் அமைப்பு (19:37), ஊர் நிர்வாகம் (பக்.19-20), குடும்பம் மற்றும் உறவுமுறை (பக்.36-37) சாதிகள் பற்றிய வழக்குகள் (பக்.39-40), மக்களின் இயல்புகள், நடத்தை முறைகள், சமய நம்பிக்கைகள், வேளாண்மை முறை மற்றும் உழவுக் கருவிகள் (பக்.56-58) மாடு வளர்ப்பு (ப.35), பெண்களின் உலகம் மற்றும் விருந்துபசரிப்பு (பக்.74-78), ஆட்களின் பட்டப்பெயர்கள் பற்றிய காரண விளக்கங்கள் (பக்.104-121;124), கர்லாக்கட்டை (கோ.கி.93), கால்நடை உணவு வகைகள் (கோ.கி.129, 133, 145), காட்டு எரிப்பு வேளாண்மை (கோ.கி.145), பரண்மேல் உட்கார்ந்து காவல் காத்தல் (கோ.கி.143), கும்பாவில் வரகரிசி சாதமும் முளைத்தயிரும் கொண்டு வருதல் (கோ.கி.138, 93), பனைநார்களை நனையப்போட்டு பக்குவப்படுத்தி அதிலுள்ள சோற்றுப்பகுதியை நீக்கிவிட்டு சன்னமாக கிழித்து அவைகளில் அகணி வடங்கள் முறுக்குதல், மாடுகளுக்கு வாக்கூடு பின்னுதல் (கோ.கி.138), தறிக்கார்ரகளிடம் சொல்லி வைத்து தறியில் மிஞ்சிய கழிவு நூல்களை வாங்கி ஆள்களுக்கு அரணாக்கயிறு பின்னிக் கொடுத்தல் (கோ.கி.139, 12), ருசிக்கல் (கோ.கி.140), வெள்ளைக்கார்ர்களிடமிருந்து தப்பிக்க மக்கள் செய்யும் கருப்பட்டி, வேப்பிலை தோரணம் (கோ.கி.137), புகையிலை பொடி தயார் செய்தல் (கோ.கி.96), எண்ணெய் தயாரிப்பது (கோ.கி.83, 94), வட்டார மொழி (கோ.கி.105), சித்தர் நோய்க்கு மருந்து (கோ.கி.106), சஞ்ச்சீவிமலை கைப்பிடித்துப் நாடிபார்த்தல் (கோ.கி.107), உப்பில்லா பத்தியம்

(கோ.கி.108), விளைச்சல் (கோ.கி.126), (கோ.கி.129), கழனி (கோ.கி.125), சிரங்கைத் தண்ணீர் (கோ.கி.11) பாம்படம் (கோ.கி.11, 13), பாராக்கயிறு (கோ.கி.19), லேஞ்சி (கோ.கி.15), ஓணி (கோ.கி.16), வங்கி (கோ.கி.19), ஊனுக்கம்பு (கோ.கி.17), உலக்கை (பக்.16,17), நோக்கால் நுகத்தடி (பக்.18), கலப்பை (பக்.18, 46), பாக்குபெட்டி (பக்.21) கவண் (பக்.20) தெல்லுத்தண்டி (பக்.22) இரும்புப்பட்டை (பக்.16) மேழி (பக்.105), ஏர்வடம் (பக்.407) நாலுக்கடகம் கேப்பை (பக்.65), இறப்புச்சடங்கு (பக்.219, 236), தேர் (பக்.252), ஊர்சாத்திரை விழா (பக்.264), மதுக்குடம் திருவிழா (பக்.290), ஏடு படித்தல் (பக்.243), (பக்.244,263), பனைநார்பெட்டி (பக்.122), குழம்புச்சட்டி, உப்பு மரவை (பக்.40), சொம்பு, நாழி, கலயம் (பக்.10), கழுவன் கழுவச்சி நடுகல் (பக்.127), கும்பி (பக்.124, 125) படப்பு கட்டுதல் (பக்.130,131), கயிறுகட்டுதல் (பக்.138), கள்தாயாரித்தல் (பக்262), ராட்சத உலக்கை (பக்.145, 147), குலுக்கை அமைப்பு (பக்.159), விதைப்பெட்டி (பக்.208), குடிதாழி (பக்.218), மடாக்கள் (பக்.262), சிலும்பி (பக்.300), கேப்பை (பக்.188), கமலைத்தண்ணீர் (பக்.189), தவிடு கலந்த பருத்திக்கொட்டை (பக்.189), உழவு வடங்கள் (பக்.202), கமளை கூன்வால் (பக்.271), சத்திரம் (பக்.60,76), கழுச்சேவல் (பக்.119), கழுமரம் (பக்.123), மடம் (பக்.246, 300), சென்னாதேவி (பக்.59) பூமாதேவி நம்பிக்கை (பக்.148) நயினார் நோன்பு (பக்.237), படைப்பு (பக்.210), இரட்டைதாலிமுறை(திருமண முறை) (பக்.102), சுமைதாங்கி (பக்.119,171), கழுவேற்றல் (பக்.121), விருந்தோம்பல் (பக்.209,459), எருது விளையாட்டு (ஏறு தழுவுதல்) (பக்.325) என நாவலெங்கும் மக்களின் பழக்க வழக்கங்கள், நகைச்சுவைகள், பழமொழிகள், வாய்மொழிக் கதைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு மக்கள் மரபுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட கோபல்ல கிராமம், நாயக்கர்களின் பண்பாட்டைச் சித்தரிக்கிறது.

ஒருதிணைசார் இனவரைவியலாளன் என்பவன் குறிப்பிட்ட பண்பாட்டை எவ்வாறு உற்றுநோக்கிப் பதிவுசெய்ய வேண்டும் என்று ஆர்வம் காட்டுவானோ அத்தகைய ஆர்வத்தோடு தம்முடைய மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் உற்றுநோக்கிக் தமது எழுத்துக்களில் பதிவு செய்ய வேண்டும் என்பது கி.ராவின் படைப்பு நோக்கமாக இருந்திருக்கிறது . என்னுடைய மக்கள் பேசுகிற பாஷையில், அவர்கள் சிந்திக்கிற மனோ இயலில், அவர்கள் வசிக்கிற சூழ்நிலையில் அமைய வேண்டும் என்னுடைய சிருஷ்டிகள் என்று நினைக்கிறவன் நான், அவாகள் சுவாசிக்கிற காற்றின் வாடை, அவர்கள் பிறந்து அளைந்து விளையாடி நடந்து திரிகிற என் கரிசல் மண்ணின் வாசமெல்லாம் அப்படியே என் எழுத்துக்களில் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது என் தீராத விருப்பம்" (மேற்கோள்:அ.மார்க்ஸ்,1986:25) என்கிறார். இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் உற்பத்திப் பொருள் என்பதால் இனவரைவியலைத் தவிர்க்க இயலாது. படைப்பாளி ஒருவன் சுயசிந்தனை என்ற எல்லைக்குள் நின்று மட்டும் ஓர் இலக்கியத்தைப் படைத்துவிட முடியாது. அவனைச் சுற்றியுள்ள புற உலகின் அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் உற்றுநோக்கி அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும் இயக்கங்களையும் நன்றாகப் புரிந்துகொண்டு அவற்றுடன் தன் கற்பனையையும் இணைத்து இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே தொல்காப்பியர் கருத்தாகும் என்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன் (1995:5,6) கூறியதற்கிணங்க சோ.தர்மன் எழுதிய கூகை

நாவலில்"ஆக்காட்டி குருவி குறிப்பிட்ட நேரம் வரை தான் தூங்கும். அப்புறம் யாராவது கழிவு உபாதை காரணமாக வெளிக்கு வந்தால் போதும். சத்தம் கொடுக்க ஆரம்பித்து விடும். இதனாலேயே அதற்கு அந்த பெயர். ஆள்க்காட்டி குருவி என்று வந்தது. ஆனால் இந்த குருவியின் சத்தத்தை வைத்து நேரம் சொல்ல முடியாது". (கோபல்ல கிராம மக்கள், பக்.159) "காட்டுக் கோழி தினைப்புனங் காப்போரைத் துயில் எழுப்பக் கூவும் இயல்பின (புறம்.28) போல் கி.ரா.வின் கோபல்ல கிராம நாவலில் "விளக்குப் பொருத்தியதும் வேலை முடிந்த கையோடு குறித்து, சாப்பிட்டு முடித்து ஒரு சோற்றுத் தூக்கமும் போட்டு முடித்ததும் ஒரு முழிப்புத்தட்டும் எழுந்து போய் ஒண்ணுக்கு இருந்து விட்டு மாடுகளுக்கு கூளம் போட்டுவிட்டு திரும்பவும் முழிப்புத் தட்டுகிறதுக்கும் கரைமரத்தில் ஆக்காட்டிக் குருவி சத்தம் கொடுப்பதற்கும் சரியாக இருக்கும்" (கோபல்ல கிராம மக்கள், பக்.158) என்று பதிவு செய்கிறார் சோ.தர்மன். ஆதி மனிதன் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்க்கை நடத்தியதன் படி மலர்ச்சியே கூகை நாவலில் கூகையை குறியீடாக்கி ஆசிரியர் பதிவு செய்துள்ளார் தான் சார்ந்த குழுவிற்குத் தீங்கு வராமலும் தன் சமூகத்தின் கட்டமைப்பு சீர் கெடாமலும் காப்பதே இனக்குழுத் தலைவனின் கடமையாக இருந்தது போல இன்றைய சமூகங்களின் விழுமியங்களை பயன்படுத்தி கட்டமைப்புடன் இருப்பதை பார்க்க முடிகிறது. சான்றாக கட்டு, மரபு என்று கூறுகிறோம். ஊரின் கட்டுக்கு மரபுக்கோ மீறினால் கடும் தண்டனை விதித்து சமூகங்கள் பாதுகாக்கப்படுவதை சில எழுத்தாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்

குறிஞ்சி நிலத்தைப் பற்றி நுட்பமாக அறிந்த கபிலரைப் போல சோ.தர்மன் அவர்கள் கூகை நாவல்களில் குருவி, பறவை, கூகைகளின் அதிகமாக வருணனைப் பதிவுகள் இடம் பெற்றுள்ளன. பெரும்பான்மையான ஊரின் அமைப்பு, வீட்டின் அமைப்பு, மாட்டு வண்டிகள், உழவுக் கருவிகள், உணவு முறைகள், புழங்குப் பொருட்களின் காட்சி திரும்பத்திரும்பச் சுட்டப்படுகிறது. ஊரில் கம்மங்கதிர், தினை பயிர்கள் விளைவித்தமையும் களத்தில் மாடுகள் பெருகிவரும், பறவைகளின் இடப்பெயர்வும் அவற்றின் அசைவுகளும் நுட்பமாக கவனிக்க பெற்று இடம் பெறுவது குறிப்பிடப்படுகிறது. மேலும் அப்பகுதி வானம் பார்த்த பூமியாகவும் கரிசல் நில மக்களின் அன்றாட வாழ்வியலோடு தொடர்புடைய நிலவியல் பகுதியாக அடையாளப்படுத்துகின்றது.

**உணவு முறைகள்**

நாவல்களில் உணவு உற்பத்தி முறைகளை இனங்கண்டு அவற்றில் நிகழ்ந்த மாற்றங்களை அடையாளப்படுத்துவதன் மூலம் கரிசல் பகுதியில் வாழும் கி.ரா. சோ.தர்மன், பூமணி, அழகிரிசாமி, பாமா போன்றோரின் நாவல்களில் பதிவாகியுள்ள உணவுமுறையில் ஏற்பட்ட பண்பாட்டு மரபுகளை பார்க்க முடிகிறது. குறிஞ்சி நிலத்தின் உற்பத்திமுறை இயற்கை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. தேன் சேகரித்தல், கிழங்கு அகழ்தல், தினை பயிரிடல், இயற்கையாக கிடைக்கும் காய், கனிகளைச் சேகரித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றின் மூலம் தங்களது உணவுத் தேவையை நிறைவு செய்தனர். குறவர்கள் காட்டை அழித்து எரியூட்டி அவ்விடத்தில் தினை, மலைகளில் பயிரிட்டமை குறித்த குறிப்புகள் போல் கோபல்ல கிராம மக்கள் நாவலில் கி.ரா. பதிவு செய்திருப்பதை காணலாம்.

சங்க இலக்கியத்தில் தானியத்தைப் பொடியாக்குவதற்கு உரல் பயன்படுத்தப்பட்டதையும்

உரல் திருகை, அம்மி, குழவி பண்பாட்டு கலப்பால் பிற்கால பண்பாட்டிலும் எவ்வாறு பயன்பட்டன என்பதை ஆசிரியர் பதிவு செய்கிறார். மக்கள் பயன்பாட்டில் அம்மியை தாய் என்றும் குழவியை பிள்ளை என்று கூறுவதுண்டு. அம்மி கல்லை குத்த வருவோர் அம்மி மட்டும் குற்றுவது குழவியை குத்த கூடாது என்ற வழக்கம் உள்ளது. "தாத்தையா நாயக்கர்ளின் காடுகளில் தான் சீனிக்கிழவன் பெண்டாட்டி பதிவாளாய் வேலை பார்த்தாள்.பெண்டாட்டி தான் தேருக்கு பின்னால் அம்மிக் குழவியை மார்பாடு அணைத்தப்படி போனாள். ஒவ்வொரு மேகலக்குடிக்காரர் இறக்கும்போதும் பள்ளக்குடி பொம்பளை ஒருத்தி தேருக்குப் பின்னால் அம்மிக்குழவியை மார்போடு அணைத்தபடி ஒப்பாரி வைத்துக் கொண்டு சுடுகாடு வரைக்கும் போக வேண்டும்.அவள் அனேநகமாக அந்த வீட்டு பதிவாளாய் இருப்பாள். பதிவாள் இல்லாத மேகலக்குடி வீடு இருக்காது." (கூகை பக்.33)

அம்மி, குழவி பற்றி ஒவ்வொரு பண்பாட்டிலும் வெவ்வேறு பண்பாட்டு செய்திகள் இருப்பதை பார்க்க முடிகிறது. அம்மியை சுடுகாட்டு தூக்கி செல்லல், கணவன் இறந்தால் மனைவியை உரலில் உட்கார வைத்து தாலி கழட்டுதல், சுடலைமாடன் வழிபாட்டு சடங்கில் உரலில் உட்கார்ந்து கணியான் கைவெட்டு, சடங்கான பெண்களுக்கும் அம்மி குழவிக்குமான உறவு, அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் திருமண சடங்கு போன்ற சடங்குகள் மக்கள் பயன்பாட்டில் இருப்பதை பார்க்க முடிகிறது.

**புல்லரிசிசோறு**

"இனக்குழு வாழ்வுமுறை அழிந்து நில உடைமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் நிலவுவது இயல்பே. இனக்குழு அழிவு முழுமையாக இராமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் சிந்தனைகள், நம்பிக்கைகள், பண்பாட்டு எச்சங்கள் அதற்கடுத்து உருவாகும். சமுதாயத்தில் எஞ்சி நிற்கும் எனத் தேவி பிரசாத் சட்டோ பர்யாயா (நா.வானமாமலை, 1970:14) லிருந்து குறிப்பிடும் நிலையை சில நாவல்கள் பதிவு செய்கின்றன. இந்த வகையில் இனக்குழுச் சமுதாயத்தின் எச்சங்களைத் தாங்கிய சில நாவல் உள்ளன. இந்த இனக்குழுச் சமுதாய எச்சங்களைக் கா.சுப்பிரமணியன் (1993) மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். "உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும் முதலில் உலகெங்கும் நிலவிற்று. ஆனால் அதைத் தொடர்ந்த மாறுதல்கள் அந்தந்தச் சூழ்நிலையைப் பொறுத்ததாயிற்று. சில இடங்களில் கால்நடை பொருளாதாரத்திற்கும், விவசாயப் பொருளாதாரத்திற்கும் மாறினர். இவற்றின் முன்னேற்றம் இனக்குழு முறை அழிய வழி செய்தன என்கிறார் (கா.சுப்பிரமணியன்,1993:33).

**"ஏமா, ஒங்கலியாணத்துல புல்லரிசிச்சோறு தான்**

**போட்டாகளாமுல்ல பாட்டி சொன்னா"**

ஆமா இத்தினிகானு வெளக்குமாத்தையும் சொளகையும் எடுத்துகிட்டுப் போயி எறும்புக் குழிகள் வெட்டி வெட்டி வெளக்காத்துட்ட கூட்டி அள்ளிட்டு வருவோம். எறும்பு சேத்து வச்ச புல்லரிசியைக் கொண்டாந்து சொந்தக்காரகளுக்கா வீட்டுக்கு ஒரு ஆளுக்குச் சாப்பாடு கொடுத்தோம். அப்பலெல்லாங் கடு பஞ்சம் (சங்.ப.97) திருமண நிகழ்வுகளில் கலந்து கொண்ட உறவினர்களுக்கு புல்லரிசியைச் சமைத்துக் கொடுத்தைச் சங்கதி நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். சங்க

இலக்கியத்திலும் விருந்தோம்பல், வீரம் பண்பாட்டின எச்சத்தை தமிழ்ப் புதினங்களில் பார்க்க முடிகிறது.

இரவலர்க்கு அளத்ததால் வரகு, திணை முதலான உணவுப் பொருட்கள் விதைக்கென வைத்திருந்த திணையை உரலிலிட்டு இடித்து சமைக்கும் இயல்புடையதாக புறம் 333 சீறூர்த்தலைவி காட்டப்படுவதுபோல் இருவருமே ஊர் நலன் பேணுதலை (காசு கொடுத்தாசோறு) இயல்பான பண்பாய் கொண்டிருந்தனர். கூடி உழைத்தல் பங்கிட்டுக் கொள்ளுதல் பிறருக்கும் வழங்குதல் எனும் பண்பு புராதானன தமிழ்ச் சமூக பெரு மக்களிடத்தில் அன்றிலிருந்து இன்று வரை பண்பாடாக விளங்கி வந்திருக்கிறது. குறிப்பாக கூடி உழைத்தல் கிடைப்பதை பகுத்து உண்டல், கானவர்கள் பன்றியை வேட்டையாடியதையும் பிறருக்கு அவன் மனைவி மகிழ்ந்து கொடுத்தச் செய்தியினை நற்றிணை பாடல் 85 கானவன் எய்த முளவுமான் கோழுங்குறை தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு காந்தன்ன சிறுகுடிப் பகுக்கும் ஓங்கு மலைநாடன் இனக்குழு வாழ்வுமுறை அழிந்து நிலவுடைமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் எழுவது இயல்பே.

சங்க கால சமூகத்தின் இயற்கையின் நடைமுறைப் பற்றி (புற.76) ஒருவகை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்னு இவ்வுலகத்து இயற்கை, ஆண்களின் உடல் வலிமையின் ஒரு வெளிப்பாடாக வீரத்தைக் கொண்டு ஒரு சாரார் மற்றொரு சாராரைப் பொருது அழித்து தொல் நிலக் கிழமை (32) பூணுவது ஒன்றும் மனித சமுதாயத்திற்குப் புதியதல்ல.

'கூழ்' என்றழைக்கப்பட்ட உபரி உற்பத்தி விளையும் நிலங்களில் கிழமை பூணுவதை 'சங்க கால அரசியல்' அவ்வாறு கிழமை பூண்ட பகடு புறந்தருநர்" வர்க்கத்தைப் பேணும் அரசியலே சங்க கால வேந்தரின் முடியாட்சி முறை வழிப்பட்ட அரசியலாகும். இந்த தொல் நில கிழமைக்காக குறிஞ்சி, முல்லை (பாலை), நெய்தல் ஆகிய நிலங்களையும் அங்கே தொன்று தொட்டு வாழ்ந்த வந்த இனக்குழு மற்றும் குடிகளையும் மருத நிலங்களை மையமாகக் கொண்ட வேந்தர்கள் வெற்றி கண்டார்கள். உழுபடை ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனான செல்வதினால் (பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமுக உருவாக்கமும் பக்.109) என்கிறார் ராஜ்கௌதமன். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்ற குறிப்பிட்ட மக்கள் திரளின் செயல்பாடு, செறிவான முறையில் இனக்குழுத் தன்மைகளுடன் இருப்பது தவிர்க்க இயலாதது. கரிசல் வட்டார மக்களின் நிலத்துடனான உறவு, வட்டார மொழி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், தெய்வ வழிபாடு, சாதிய ஒடுக்க முறை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தந்து எழுதப்பட்டவை கரிசல் நாவல்கள். கரிசல் எழுத்தாளர்களில் கரிசல் காட்டு மக்களையும் அவர்களின் வாழ்வியலையும் பதிவு செய்ததோடு கரிசல் வட்டார வழக்குச் சொல்லகாரதி உருவாக்கியத்தில் முதன்மையானவர் கி.ரா.

"பூமியைத் தோண்டும் போது பலவிதமான வினோதமான கிழங்குகள் செடிகளின் வினோதமான வேர்கள் அவர்களுக்கு தட்டுப்படும். இந்த கிழங்குகளைத் தின்னலாமா கூடாதா என்று அவர்களுக்கு தெரியவில்லை. சில இடங்களைத் தோண்டும் போது மண் கமழும். பருத்த கோரைக் கிழங்குகள் தின்பதற்குக் கிடைக்கும் உண்டதற்கு வளமான காட்டு கீரை வகைகள் அவர்களுக்கு ஏராளமாக கிடைத்து வந்தது. அதற்கு வெஞ்சனமாக பொரித்து சாப்பிடுவதற்கு நிறைய காட்டு

பறவைகளின் முட்டைகள் தாராளமாக கிடைத்தன" (கோபல்ல கிராம மக்கள், பக்.79).

சில நாட்களில் நிறைய மிச்சம் விழும் மாமிசத்தை சிறு துண்டுகளாக வெட்டி உப்புக்கண்டம் போட்டு வெயிலில் நன்றாகக் காய வைத்து பிழைக்க காலத்துக்கு என்று பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வார்கள்" (கோபல்ல கிராம மக்கள், பக்.79).

"உணவுக்காகப் பறவைகளையும் பிராணிகளையும் வேட்டையாடினார்கள் கள்ளிப் புதருக்குள் எங்கே கண்டாலும் ஏராளமான தேன் தட்டுகள் காணப்பட்டன. இதனால் அவர்களுக்கு சட்டி சட்டியாகத் தேன் கிடைத்தது. தீயில் பக்குவமாக வாட்டப்பட்ட மாமிசத் துண்டுகளை தேனில் தோய்த்து உண்டார்கள்"

சில நாட்களில் நிறைய மிச்சம் விழும் மாமிசத்தை சிறு துண்டுகளாக வெட்டி உப்புக்கண்டம் போட்டு வெயிலில் நன்றாகக் காய வைத்து மழைக்காலத்துக்கு என்று பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வார்கள்" (கோபல்ல கிராம மக்கள், பக்.79)

. குறிஞ்சி திணை தமிழரின் ஆதி சமூக வாழ்வை பிரதிபலிக்கும் திணையிடும் என சிலம்பு சா.செல்வராசு குறிப்பிடுவது போல இனக்குழு வாழ்க்கை முறையில் அனைவரும் சமமாக கருதப்பட்டனை தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடை (தொல்.நூற்.1004) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் உள்ள பாதீடு, பகிர்ந்துண்ணால் என்ற வழக்கம் இனக்குழு மக்களிடையே இருந்ததற்கான எச்சம் இன்றைய நாவல்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதை காண முடிகிறது.

பொருள் உற்பத்தியில் பின்னடைவுடன் இருந்த சமூகமான வேடர், குறவர், போன்றோர் தமக்கு கிடைத்த உணவைப் பகிர்ந்து உண்டதை, **"புல்லென அடை முதல் புறவு சேர்ந் திருந்த" (புறம்.328:1)** என்ற பாடலடிகள் சமூகங்கள் பொருளாதாரத்தில் ஏற்ற தாழ்வுடன் இருந்ததை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டினாலும் வறுமையுற்ற போதும் வாள், யாழ் பணயமாக வைத்து பொருள் பெற்ற விருந்தினரைப் பேணினர் என்பதை சுட்டுகின்றன. **"நெருகை வந்த விருந்திற்கு மற்றுத்தன்" (புறம்.316:5)** என்ற பாடலடிகள் வறுமையுற்ற நிலையிலும் விருந்தினரைப் பேணிப் பகிர்ந்து உண்ணும் இனக்குழு மக்களின் வாழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. பசித்த பாணர் மனம் மகிழ வரகை கடனாக பெற்று அவர்கள் பசியைப் போக்கியதை,

**"வரகு கடன் இரக்கும் நெடுந்தகை**
**அரசுவரின் தாங்கும் வல்லாளன்னே"**

என்னும் பாடல் வரிகள் சுட்டுகிறது.

சங்க இலக்கியத்தில் தினை, கிழங்கு, தேன் எடுத்தல் தொழிலாக இருந்ததை பதிவு செய்திருப்பது நாவலில் இச்சமூகம் மக்களிடையே இருப்பதை பார்க்க முடிகிறது.

வேட்டையாடுதல், கால்நடை வளர்ப்பு பயிர் சாகுபடி, மீன்பிடித் தொழிலிலும் ஈடுபட்ட மக்களின் வாழ்வில் கூடி உழைக்கும் முறையும் கூடி உண்ணும் முறையையும் கொண்ட சமூகத்தினை இன்று வரை பண்பாடாக விளங்கி வந்திருப்பதையும் நாவலாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்

**தினை பயிர்கள், கம்பு, உழுந்து**

"கம்புப் பயிர் கணக்கில்லாமல் தூர்கட்டி வந்தது. தினைப்பயிர் நம்ப முடியாதபடி கனமாக

வளர்ந்து வந்தது. எள்ளுச் செடியின் வளர்ச்சி ஆள் கைஎடுப்பு உயரத்துக்கு இருந்தது. பருத்திச் செடிகளுக்கு ஊடே ஆள் நுழைந்தால் தெரியாது. அதில் பூத்த பூக்களும் காய்களும் பிஞ்சுகளும் தேர் ஜோடித்த மாதிரி விளங்கியது" (பக்.89).

**காட்டெரிப்பு வேளாண்மை**

"மழைக்காலம் ஒருவேளை தாமதமாகிவிட்டது என்றால் உணவுக்குப் பிராணிகளும் பறவைகளும் முட்டைகளும் பழங்களும் தேனடைகளும் கீரைவகைகளும் கிடைக்கு இந்தக் காட்டை தீ வைத்துப் பொசுக்கிவிட்டுப் பிறகு என்ன செய்வதாம்?" (பக்.80)

"முந்தின நாள் மாலை தீர்மானித்த பிரகாரம் காட்டுக்குள்ளேயே ஒரு தீவுக் காட்டை உண்டாக்க அன்று அதிகாலையிலேயே முனைந்துவிட்டார்கள். நிறை கர்ப்பிணிகள், வயதால் மிகவும் தளர்ந்தவர்கள், நீண்ட நடைப்பயணத்தின் போது கால்கள் வீங்கி வெடித்துப் புண் ஆறாதவர்கள், நோயாளிகள், தூரமான பெண்கள் இவர்களைத் தவிர மற்ற ஆண் பெண் அனைவருமே இந்தக் காட்டை அழித்து நிலம் உண்டாக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்கள்" (பக்.82)

வழியில் அவர்களுக்கு திருடர் கொள்ளையர் பயத்துக்காக பாதுகாப்புக்குக் கொண்டுவந்த வாள், கத்தி, வெட்டறுவாள், கண்டகோடாலி முதலிய ஆயுதங்கள் இப்போது காட்டைத் திருத்தவும் மரங்களை வெட்டவும் பயன்பட்டது. (கோ.மக்.பக்.78)

"தீவுக்காட்டின் தென்மேற்கு மூலையில், காய்ந்த சருகு செத்தைகளைப் பரவலாகக் குவித்தார்கள், குழந்தைகளும் பெரியவர்களும் சேகரித்திருந்த காட்டாமணக்கு விதைகளையும் வேப்பம் விதைகளையும் தாராளமாகத் தூவினார்கள். தீக்குழியில் இருந்து கொழுந்துவிட்டு எரியும் நீண்ட கட்டைகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீக்கட்டைகளை அதன் மேல் எறிவதற்கு முன்னால் பாட்டி சத்தம் போட்டு அந்தக் காட்டை நோக்கிக் கும்பிட்டுச் சொன்னாள். "ஏ வனதேவதைகளே, காத்துக் கருப்புகளே, இந்தக் காரியத்துக்கு எந்தவித விக்னமும் வராமல் நீங்கதான் எங்களுக்குத் துணை செய்யணும். எல்லாரும் தீக்கட்டைகளை எடுத்து அதன் மேல் வீசினார்கள். எண்ணைக் கொட்டைகள் வெடித்துச் சிதறின. தீ சட்சட வென்று வேகத்தோடு பிடித்து எரிந்தது. தீயின் அந்த ஓசை, அது பற்களை நெடு நெடு என்று கடித்து ஆங்காரமாகக் கோபம் கொண்டு எழுவது போல் இருந்தது. புகை உயர்ந்து ஆகாயம் முட்டியது காற்றின் வேகம் தீயை உசுப்பி எழுப்பியது. அந்தக் காட்டை அக்கினிதேவன் புசிக்க ஆரம்பித்தான்"(பக்.87)

**கிழங்கு அகழ்தல்**

"பூமியைத் தோண்டும் போது பலவிதமான வினோதமான கிழங்குகள், செடிகளின் வினோதமான வேர்கள் அவர்களுக்குத் தட்டுப்படும். இந்தக் கிழங்குகளைத் தின்னலாமா கூடாதா என்று அவர்களுக்குத் தெரியவில்லை. சில இடங்களைத் தோண்டும் போது மண்மணம் கமழும் பருத்த கோரைக்கிழங்குகள் தின்பதற்குக் கிடைக்கும். உண்பதற்கு வளமான காட்டுக் கீரை வகைகள் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத்து வந்தது. அதற்கு வெஞ்சனமாகப் பொரித்துச் சாப்பிடுவதற்கு நிறைய காட்டுப் பறவைகளின் முட்டைகள் தாராளமாகக் கிடைத்தன" (பக்.79)

குறிஞ்சி நிலத்தின் உற்பத்திமுறை இயற்கை சார்ந்தவை. அதே போல் தேன் சேகரித்தல்,

கிழங்கு அகழ்தல், திணை விதைத்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றின் மூலம் குறிஞ்சி நில மக்கள் தங்களது உணவு தேவையை நிறைவு செய்த பதிவுகளும் கி.ரா.வின் கோபல்ல கிராமம் நாவல்லில் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பரண்**

"தூரத்துப் புஞ்சைக்காட்டில் நடமாட வேண்டிய மனுசர்கள் காரியை எந்த நேரத்தில் எந்த இடத்தில் எதிர் கொள்ள வேண்டியது நேருமோ என்று பயந்து செத்தார்கள். கம்மங்கதிர் காவலுக்கு பரண்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டிருந்த எர்ய்யா மத்தியானக் கஞ்சிகுடிக்க வீட்டுக்குப் போவாம் என்று இறங்கக் கால் வைத்தார். பரணின் ஏணிப் பளுதில் கீழே பரனுக்குக் கீழே பார்த்தார். காரி சாவகாசமாப்படுத்து அசை போட்டுக் கொண்டிருக்கிறது.

இனவரைவியல் படி இவர்களது உணவு சிறுதானிய கஞ்சி ஆகும். தாழ்த்தப்பட்ட இனத்தவராக சமூத்தாரால் ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட ஒரு இனத்தவர் உணவு விடுதியில் பசி பலகையில் கள் அமர்ந்து உண்ண அனுமதி இல்லை. நாவாலசிரியர் தேர்ந்தகளம் கோவில்பட்டி என்பதால் தெலுங்கு பேசும் இனமக்கள் உணவு விடுதி நடத்தி வரும் உணவகங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தார் தரையில் அமர்ந்து தான் உண்ண வேண்டும். இவ்வினத்தார் உழைப்பாளிகள் என்பதால் உண்ணுப் உணவிற்கு அளவில்லை. விடுதியில் ஆக்கி வைத்திருந்த அரிசி உணவை தீர்ந்துவிடும்படி செய்து விட்டார்கள் விடுதி நடத்தவர் இனி இவர்களுக்கு அளவுச் சாப்பாடு தான் போட வேண்டும் என்று நினைக்கிறார். அளவுக்கு மீறி சென்றுவிட்டது என்று சொல்வதைவிட உழைப்பாளிகள் உழைப்பிற்கு தேவையான உணவை உண்டார்கள் என்பதே பொறுத்தமாகும் என்றாலும் உயர் இனத்தார் தாழ்ந்தோரை மதிப்பிடும் போது அளவுக்கு மீறி கூட கிடைக்க வில்லையே என்று தக்கம் நாயக்கர் இனத்தை சேர்ந்த நாச்சியார் அம்மாவின் கூற்று விளக்குகிறது. உயர்வு தாழ்வு கற்பித்தல் என்பது அறம் உழைப்பிற்கேற்ப உணவு தரப்பட வேண்டும் என்பது நியதி என்பதை எடுத்துக்காட்டுப் வகையில் சோ.தர்மன் இந்நிகழ்வை அளித்துள்ளார்.

**விருந்தோம்பல்**

"நெல்லுப் பருக்கையும் பருப்புச் சாம்பாரும் வந்த பெறகுதான் பயபுள்ளைகளுக்கு நல்ல கொழுப்பேறிப் போச்சி" என்ற பெரியவர்கள் செல்லமாக வையார்கள். ரொம்பப் பேர்நெல்லுச் சோற்றுக்காகவே 'விரதம்' இருந்தார்கள்.

பர்மா அரிசி வந்த புதுசில், கரிசல்க்காட்டையே அது ஒரு பேயாகப் பிடித்து அலைக்கழிக்கத் தொடங்கியது வராத விருந்நாட்கள் வந்துவிட்டால் எப்பாடுபட்டாகிலும் அவர்களுக்கு நெல்லுச்சோறு பொங்கி கோழியடித்து சாப்பாடு போடணும் என்று ஆகிவிட்டது.

வேலைக்குப் போனால் கம்மம்புல்லோ கேப்பையோ சோளமோதான் கூலியாக கிடைக்கும் பணத்தைக் கண்ணால் பார்ப்பதே அரிதாக இருந்தது அப்படியிருக்கும் போது அரிசியை எப்படி வாங்கி எப்படிச் சமைக்க. (கோபல்ல கிராம மக்கள், பக்.15). **(நற்.85:8-11)** என்னும் பாடல் வாகள் கானவன் எய்த முள்ளம் பன்றியின் தசையைக் கொடிச்சி சிறு குடியினருக்கு மகிழ்ச்சியுடன் பகுத்துக் கொடுத்தாள் என்பதை காண முடிகின்றது. **"களம் வளர் ஈந்தின் காழ் கண்டணின" (பெரும்.130:33)** மனைதோறும்

எயினப் பெண்கள் தம் குடிசைக்கு வந்த விருந்தினவாகிய பாணர் முதலியவர்களுக்கு உடும்பின் தசையைச் சமைத்து, விருப்புடன் வழங்கி உபசரித்த செய்தியை காணலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழியினால் அடையாளப்படுத்தப்பட்ட மக்கள் இன்றளவும் தொடர்வதற்குக் காரணம் சங்க இலக்கியங்கள் போல் அதன் எச்சங்கள் சிறு சிறு கூறுகளாய் தமிழ் நாவல்களில் பதிவு செய்யப்படுகிறது .நாவலில் நடைபெறும் சம்பவங்கள் சங்க இலக்கிய மரபில் விவரிக்கப்பட்டுள்ளன..

இயற்கை சார்ந்ததாகவே குறிஞ்சி, நிலத்தின் உற்பத்திமுறை தேன் சேகரித்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல், இயற்கையாகக் கிடைக்கும் அரிசி ஆகியவற்றின் மூலம் தங்களது உணவு தேவையை நிறைவு செய்கின்றனர்.

பண்டைய பூம்புகாரின் நிலவியல் பின்னணி, பருப்பொருட்கள், சமூகப் பண்பாட்டு வாழ்க்கை ஆகியயாவும் ஆகியவற்றில் உற்று நோக்கப்பட்டுப் பட்டினப்பாலையில் நிரல்பட விவரிக்கப்பட்டது போல் தமிழ் நாவல்கள் எந்த ஒரு மக்கள் இனமும் தன்னுடைய நிகழ்காலத்தில் சமூக, அரசியல், பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னுடைய பண்பாட்டு இனங்காண முற்படுவதும், பாரம்பரிய பெருமைகளைப் பறைசாற்றி கொள்ள விழைவதும் இயல்பானவை. இனித் தேவையை அந்தந்தப் பண்பாட்டின் படைப்பாளர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ளமுடியும்.

இயற்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வை அமைத்துக் கொண்டு வாழும் மக்களின் கரிசல் நிலத்தியல்பு அவரவர் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் நிலைமைக் கேற்ப அவரவர் வாழ்வியல் நிலைகளும் வேறுபட்டு அமைந்திருப்பதை நாவலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். “உற்பத்தி சக்திகளின் மீது மனிதன் ஆதிக்கம் பெறுவது தான் மனிதகுல முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாகும். இயற்கை நிலைமையை வரலாற்று கட்டங்கள் இவற்றில் அமைந்துள்ளன. வேறுபாடுகள் பல்வேறு மக்களின் வளர்ச்சியிலும் பல்வேறு வர்க்கங்கள், சமூக நிறுவனங்கள், பண்பாட்டுத் துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்திலும் வேறுபாடுகள் ஏற்படுத்துகின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிற பொழுது சமூகத்தின் ஓர் பகுதி அல்லது மற்றோர் பகுதியில் வேகமாகவோ மெதுவாகவோ வளர்ச்சி காணப்படும்” (றுயசனந,1952, பக்.1-2) என மார்க்ஸ், எங்கெல்ஸ் குறிப்பிடுவது சமுதாயங்கள் தோறும் ஏற்பட்ட வேறுபட்ட வாழ்வியல் நிலைகளுக்கான காரணங்களை விளக்குகிறது. இவ்வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் தமிழ் நாவல் இலக்கியங்களை ஆராய்கிற போது சங்க இலக்கிய திணை பாகுபாட்டிற்கான எச்சங்கள் படிமலர்ச்சியாய் இன்னும் தமிழ்ச் சமூகத்தில் வேருன்றி இருப்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

தேவைகள் பொதுவானதாக இருந்தாலும் அத்தேவைகளை நிறைவு செய்யும் முறைகள் பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடுவதையும் அவற்றை ஈடுசெய்தல் ஒவ்வொரு பண்பாடும் தனிப்பட்ட முறையினை கொண்டு விளங்குகிறது. அதற்கு காரணம் இயற்கைச் சூழலும் சமுதாயச் சூழலும் காரணமாகும். கரிசல் நில பண்பாட்டில் மக்கள் இனக்குழு சமூக எச்சங்கள் கரிசல் நில பிண்ணனியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்களில் பெரும்பான்மையாக இனக்குழு சமுதாய எச்சப்

பதிவுகள் பதிவாகியுள்ளதை பார்க்கும் போது தென் தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்கள் தோன்றியதற்கான வாய்ப்புகள் இருப்பதை உணர முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. சோ.தர்மன், கூகை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1990.
3. ஆ. தனஞ்செயன், விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள், வல்லினம், புதுச்சேரி, 2006.
4. சி.மகேசுவரன், இனக்குழுவரைவியல் (ஒரு பன்முகப் பார்வை), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2020.
5. பெ.மாதையன், சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2012.
6. ஞா.ஸ்டீபன், இலக்கிய இனவரைவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2017.
7. ஆ. சிவசுப்பிரமணியன், இனவரைவியலும் தமிழ் நாவலும், நாவாவின் ஆராய்ச்சி, சென்னை, 1995.
8. அ.மார்க்ஸ், படைப்பாளி வாழ்க்கை இலக்கியம், இராதா பதிப்பகம், புதுக்கோட்டை, 1986.
9. கி.ராஜநாராயணன், கோபல்ல கிராமம், சிவகங்கை, 1993.